ConnectABILITY
A project of Community Living Toronto

## தகவல் அளிப்பதில் உள்ள வளர்ச்சி

***மொழியை வளர்ப்பதற்கான எளிய வழிகள்:***

1. குழந்தையின் உயரத்திற்கு இறங்கி வந்து அவரது கவனத்தை பெறுங்கள்.
   (உ.ம்.) குழந்தையின் முன்னால் மண்டியிட்டு அவரது முகத்தைத் தொடுங்கள்.
2. குழந்தையுடன் பேசுங்கள்.
   அ. குழந்தை இருக்கும் இடத்தில் உள்ள பொருள்களைப் பற்றி விவரியுங்கள்
   (உ.ம்) சிவப்புப் பந்து (பந்தை எடுத்து காட்டுங்கள்)
   ஜவாரோட ட்ரக் (ட்ரக்கை காட்டுங்கள்)
   ஆ. என்ன நடக்கிறது என்று விவரியுங்கள்
   (உ.ம்) அப்பா சமைத்துக் கொண்டிருக்கிறார்
   நாய் குரைக்கிறது
   இ. நீங்களோ அல்லது குழந்தையோ என்ன செய்கீறிர்கள் என்று விவரியுங்கள்
   (உ.ம்) ஜூஸை ஊற்றுகிறோம்
   சுமயாவிற்கு டையப்பர் மாற்றுகிறோம்
3. குறுகிய, எளிமையான வாக்கியங்கள் பாவியுங்கள்
   (உ.ம்) ஜாக்கெட்டை போடுங்கள்
   கையை உள்ளே விடுங்கள்
   ஜிப்பைப் பூட்டுங்கள்
4. மீண்டும், மிண்டும் கூறுங்கள். முக்கிய வார்த்தைகளை அழுத்திக் கூறுங்கள். ஒரு பொருளை செயலை ஒவ்வொரு முறையும் அதே வாத்தையை பாவியுங்கள்.
   (உ.ம்) அதோ ஒரு நாய். பெரிய நாய். நாய் லொள் லொள் என்று கத்தும்.
5. சாயல்கள் மற்றும் முகக் குறிகளை அதிகப்படுத்துங்கள்.
   (உ.ம்) ஓ (புருவத்தை உயர்த்தி வாயை திறங்கள்) நாய் பாருங்கள் (நாயைச் சுட்டிக்காட்டுங்கள்)
6. குழந்தை சொல்லும் சத்தங்களை, வார்த்தைகளை திரும்பக் கூறுங்கள்.
   (உ.ம்) பிள்ளை - பா , நீங்கள் பா
   பிள்ளை வாவா , நீங்கள் வாவா
7. பிள்ளை கூற முயற்சிக்கும் வார்த்தைகளை மாதிரி செய்வதோடு விரிவாக்குங்கள்
   (உ.ம்) பிள்ளை கார் நீங்கள் கார் (மாதிரி)
   நீங்கள் கார்போ (விரிவாக்குதல்)
8. ஆம், இல்லை கேள்விகளை தவிர்ங்கள். ஏனெனில் பிள்ளை ஒரு வார்த்தையில் தான் பதிலளிப்பார்.
   (உ.ம்) நீங்கள் இன்னும் பால் வேண்டுமா ?
   பிள்ளை ஆம்
   நீங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்?
   பிள்ளை இன்னும் பால்
9. பிள்ளை வார்த்தைகள் கூறவில்லை என்றால் அவரது சைகைகளை அர்த்தம் கொள்ளுங்கள் அவ்விதத்தில் என்ன வார்த்தை வரும் என்பதை சொல்லுங்கள் , பிள்ளை பின்னாளில் பாவிக்க

ConnectABILITY
A project of Community Living Toronto

(உ.ம்) அவர் உங்களிடம் வந்து உங்கள் கையை இழுத்தால் வரவேண்டுமா? சரி நான் வருகிறேன். வாருங்கள்.

பீ.கு. பிள்ளையிடம் இருந்து வார்த்தையோ சைகையோ எதிர்பார்க்கும் போது சிறிது நேரம் பொறுத்திருங்கள்.

(உ.ம்) நீங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்?(5 வரை எண்ணுங்கள்)

நீங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்?( 5 வரை எண்ணுங்கள்)

பிள்ளை பதிலளிக்காவிடில் நீங்கள் பால் என்று கூறுங்கள்.

Translated by: Jothi Ganesh